**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்**

# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் III பரீட்சை - 2022 யூலை

## (302) முகாமைத்துவக் கணக்கீடும் நிதியியலும்

இவ்வினாத்தாள் 100 புள்ளிகளை உள்ளடக்கி மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கிறது.

1. பகுதி A ஆனது 20 புள்ளிகளுக்காக நான்கு (1 – 4) கட்டாய வினாக்களை உள்ளடக்கியுள்ளது.

2. பகுதி B ஆனது 30 புள்ளிகளுக்காக மூன்று (5 – 7) கட்டாய வினாக்களை உள்ளடக்கியுள்ளது.

3. பகுதி C ஆனது 50 புள்ளிகளுக்காக மூன்று (8 – 10) கட்டாய வினாக்களை உள்ளடக்கியுள்ளது.

### பகுதி A

### வினா இல. 01

இந்த கேள்வியானது 2022 மாரச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தொழிற்படு மூலதனச் சுற்றுக் காலத்தைக் கணிப்படுதலை பரீட்சித்திருந்தது.

**செயலாற்றுகை:**

அதிகமான பரீட்சார்த்திகள் முழுமையான புள்ளிகளைப் பெற்றிருக்கவில்லை. இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மிக குறைவாக அமைந்திருந்தது.

**மோசமான செயலாற்றுகைக்கான காரணங்கள்**

1) பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் விற்பனைக் கிரயத்தை சரியாக கணிப்பிடாததுடன் அதனால் கம்பனியால் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவினை சரியாக கணிப்பிடவில்லை.

2) விற்பனைக் கிரயமானது தொக்கு இருப்புக் காலத்தை பயன்படுத்தி கண்டுபிடிக்கப்பட வேண்டியதுடன் பெரும்பாலானவர்கள் அதனை சரியாக பின்பற்றவில்லை.

**மோசமான செயலாற்றுகைக்கான ஏனைய காரணங்கள்**

1) ஆண்டிற்கான சராசரி கடன்பட்டோர் இனங் காணப்படவில்லை.

2) கடன் விற்ானையை கணிப்படும் போது மொத்த விற்பனையில் 50% கடன் விற்பனையாக கருதப்படவில்லை.

3) தொழிற்படு மூலதனச் சுற்றுக் காலத்தை கணிப்பீடு செய்ய பயன்படுத்தப்பட்ட சமன்பாடு தவறானது.

**பரீட்சகரின் பரிந்துரைகள்**

1) பரீட்சார்த்திகள் இந்த வகையான கணிப்பீடுகளில் பயிற்சி பெற வேண்டும் என்பதுடன் தொழிற்படு மூலதனச் சுற்றுக் காலம் பற்றிய எண்ணக்கருவையும் அதனை கணிப்பீடு செய்வதற்கான விளக்கத்தையும் கொண்டிருக்க வேண்டும்.
2) சுய கற்றல் புத்தகத்திலுள்ள உரிய அதிதியாயத்தை வாசிக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றது.

## வினா இல. 02

எல்லைக் கிரயமிடல் முறையைப் பயன்படுத்தி, 2022 யூலை 31 இல் முடிவடைந்த மாதத்திற்கான வருமானக் கூற்றைத் தயாரித்தலை இவ் வினா பரீட்சித்திருந்தது.

**செயலாற்றுகை:**

சாரசரி

**மோசமான செயலாற்றுகைக்கான காரணங்கள்**

1) பெரும்பாலான பரீட்சார்த்திகள் விற்பனை வருமானத்தை கணிப்பிடுகையில் உண்மையான விற்பனை அலகுகளான 1915 அலகுகளிற்கு பதிலாக பாதீட்டு விற்பனை அலகுகளான 1900 அலகுகள் அல்லது உண்மையான உற்பத்தி அலகுகளான 1870 அலகுகளை பயன்படுத்தினர்.
2) பெரும்பாலான பரீட்சார்த்திகள் வருமான கூற்றிலே பாதீட்டு ஆரம்ப மற்றும் இறுதி தொக்கு அலகுகளை பயன்படுத்தினர்.
3) பெரும்பாலான பரீட்சார்த்திகள் மொத்த மாறும் கிரயத்தை சரியாக கணிப்பீடு செய்யவில்லை.
4) பெரும்பாலான பரீட்சார்த்திகள் உண்மையான நிலையான மேந்தலை கிரயத்துக்கு பதிலாக பாதீட்டு நிலையான கிரயத்தை பயன்படுத்தினர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள்**

கடந்த கால வினாத்தாள்களிலுள்ள இந்த வகையான வினாக்களில் பயிற்சி பெறுவதுடன்

சுய கற்றல் புத்தகத்தையும் பயன்படுத்தி அறிவை மேம்படுத்தல்.

## வினா இல. 03

2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நெகிழ்வுப் பாதீட்டை (தொழிற்பாட்டுக் கூற்றினை) தயாரித்தலை இவ் வினா பரீட்சித்திருந்தது.

**செயலாற்றுகை:**

திருப்திகரமான மட்டம்

**மோசமான செயலாற்றுகைக்கான காரணங்கள்**

1) சில பரீட்சார்த்திகளுக்கு நெகிழ்வுப் பாதீட்டு எண்ணக்கரு தொடர்பில் பெரியளவில் அறிவில்லை. சில பரீட்சார்த்திகள் நெகிழ்ச்சி பெறுமதியை தவறாக கணிப்பிட்டனர். சில பரீட்சார்த்திகள் நிலையான உற்பத்திக் கிரயம் மற்றும் நிர்வாக கிரயம் என்பவற்றை சீராக்கம் செய்தனர். இதன் மூலம் கருதப்படுவது
2) பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினாவில் தரப்பட்டடுள்ள பாதீட்டு மற்றும் உண்மைப் பெறுமதிகளை பயன்படுத்தி நெகிழ்வுப் பாதீட்டை தயாரித்தனர். அவர்கள் நெகிழ்ச்சி பெறுமதியை கணிப்பிடவில்லை.
3) பெரும்பாலான பரீட்சார்த்திகள் <u>பாதீட்டு மற்றும் உண்மைப் பெறுமதிகளை பயன்படுத்தி</u> முரண்களை கணிப்பிட்டனர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள்**

1. விடையளிப்பதற்கு முன்னர் நன்றாக கேள்வியை வாசிக்கவும்.
2. கடந்த கால வினாத்தாள்களில் பயிற்சி பெறவும்
3. சகல வேலைகளும் சரியாக காட்டப்பட வேண்டும்.

## வினா இல. 04

குறுங்கால தீர்மானம் எடுத்தலின் கீழ் உரிய செலவினம் தொடர்பிலான அறிவை இவ் வினா பரீட்சித்திருந்தது.

**செயலாற்றுகை:**

திருப்திகரமான மட்டம்

**மோசமான செயலாற்றுகைக்கான காரணங்கள்:**

1) பெரும்பாலான பரீட்சார்த்திகள் கிரய சேமிப்பு உருப்படிகள் தொடர்பில் கவனம் செலுத்தவில்லை. சிறப்பாக நேர் கூலி மற்றும் நிலையான கிரயம் தொடர்பிலான சேமிப்பை புறக்கணித்தருந்தனர்.

2) தீர்மானம் எடுத்தல் தொடர்பில் கிரய கோட்பாடு இலகுவாக இருப்பினும் பரீட்சார்த்திகள் கிரய உருப்படிகள் தொடர்பில் கவனம் செலுத்தவில்லை.

3) பெரும்பாலான பரீட்சார்த்திகள் நட்டஈடு தொடர்பில் தவறுதலாக காட்டியதுடன் தவறுதலான விடையை பெற்றிருந்தனர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள்**

- கடந்த கால வினாத்தாள்களில் பயிற்சி பெறவும்

## பகுதி B

**வினா இல. 05**

இந்த கேள்வியால் பரீட்சிதக்கப்படுவது:

a) தரப்பட்ட இரண்டு ஊழிய வளங்களிலிருந்து வரையறுக்கப்பட்ட காரணிகளை இனங்காண்க.

b) வரையறுக்கப்பட்ட காரணிகளை பயன்படுத்தி கலப்பு உத்தம உற்பத்தி கலவையை கணிப்பீடு செய்க.

**செயலாற்றுகை:**

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இதற்கு சிறப்பாக விடையளித்திருந்தனர். அவர்கள் வரையறுக்கப்பட்ட காரணிகளுக்கான பங்களிப்பை சரியாக கணிப்பீடு செய்வதன் மூலம் கலப்பு உத்தம உற்பத்தியை கணிப்பீடும் திறமையை கொண்டிருந்தனர்.

வெவ்வேறுபட்ட உற்பத்தி வரம்புகள் மீதான பங்களிப்பு சரியாக கணிப்பீடு செய்யப்பட்டது. ஆயினும் வரையறுக்கப்பட்ட காரணிகளுக்கான பங்களிப்பை சரியாக கணிப்பீடு செய்வதில் அலகுக்கான பங்களிப்பை சரியாக கணிப்பீடு செய்யாதான் மூலம் பரீட்சார்த்திகள் கணிப்பீடுடில் தவறை மேற்கொண்டனர். ஆயினும் கணிப்பீடு செய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட காரணிகள் மூலம் வரிசைகளானது சரியாக கணிப்பீடு செய்யப்பட்டது.

**மோசமான செயலாற்றுகைக்கான காரணங்கள்:**

1. வேலைகள் சரியாக கணிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் அதிக திறனற்ற ஊழியர்கள் மற்றும் திறனான ஊழியர்கள் பற்றாக்குறையை சரியாக இனங்காண முடியவில்லை.
2. வரையறுக்கப்பட்ட காரணிகளுக்கான பங்களிப்பை கணிடுபிடித்தலில் தவறான கணிப்பீடு.

**பரீட்சகரின் பரிந்துரைகள்**

கடந்த கால வினாத்தாள்களில் பயிற்சி பெறவும்.

## வினா இல. 06

2022 அக்டோபர், நவெம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களுக்கான காசுப் பாதீட்டைத் தயாரிக்குக.

**செயலாற்றுகை:**

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இதற்கு சிறப்பாக விடையளித்திருந்தனர். உரிய மாதத்திற்கான விற்பனை மற்றும் செலவினங்கள் என்பவற்றை சரியாக இனங்கண்டனர். ஆரம்ப காசு இருப்பானது சரியாக காட்டப்பட்டிருந்தது.

**மோசமான செயலாற்றுகைக்கான காரணங்கள்:**

1. செலவினங்களானவை பாதீட்டில் சரியாக இனங்காணப்படாவிடிலும் காசு உட்பாய்ச்சலானது சரியாக கணிப்பிடவில்லை.
2. காசு உட்பாய்ச்சலை கணிப்பிடும் போது வலைப்பின்னல் விற்பனை 30% கருதப்படவில்லை.
3. 70% விற்பனையில் சகல வேலைகளும் தொகைரீதியாக சரியாக கணிப்பீடு செய்யப்பட்டது ஆயினும் விற்பனை பெறுமதியை அதன் ரூ. 1350 விற்பனை விலையினால் பெருக்கல் செய்யப்படவில்லை.
4. 65% இல் 5% ( 60 நாட்கள் ) தவறுதலாக சில பரீட்சார்த்திகள் குறிப்பிட்டிருந்தனர்.
5. சில பரீட்சார்த்திகள் இறுதி காசு புத்தக மீதியை காட்டவில்லை.

**பரீட்சகரின் பரிந்துரைகள்**

1. கடந்த கால வினாத்தாள்களில் பயிற்சி பெறவும்.
2. சுய கற்றல் புத்தகத்திலுள்ள உரிய கேள்வி மற்றும் விடைகளை பயிற்சி பெறவும்.

**வினா இல. 07**

இந்த வினாவில் கேட்கப்படுவது

1. நீண்டகால நிதியிடலை தெரிவு செய்கையில் கருதப்பட வேண்டியவை.
2. சாதாரண வாக்குரிமைப் பங்குகளின் கிரயம் மீட்கத்தக்க தனிச்சங்களின் கிரயம் மற்றும் சந்தைப் பெறுமதிகளைப் பயன்படுத்தி, நிறையேற்றிய சராசரி மூலதனக் கிரயம் என்பவற்றை கணிப்பிடுக.

**செயலாற்றுகை:**

மொத்த செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது பெரும்பாலான பரீட்சார்த்திகள் பங்கொன்றிற்கான பங்குலாபத்தை பங்கொன்றிற்கான சந்தை பெறுமதியுடன் ஒப்பீடு செய்யும் போது சாதாரண பங்குகளின் கிரயமானது சரியாக கணிப்பீடு செய்யப்பட்டது. சிலர் பங்குலாப வளர்ச்சி வீதம் தரப்பட்டிருந்த போதிலும் பங்குலாப வளர்ச்சி முறையை பயன்படுத்தவில்லை.

ஆயினும் மீட்கத்தகு தனிச்சங்களின் கிரயமானது சரியாக கணிப்பீடு செய்யப்படவில்லை ஏனெனில் ஆரம்ப வருடத்தில் மற்றும் வருட இறுதியில் காசு உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல் மற்றும் வரிக் கூறுகள் சரியாக இனங்காணப்படவில்லை. ஆயினும் நிகர இற்றைப் பெறுமதியானது IRR கணிப்பிடும் போது இரண்டு கழிவுக் காரணிகளானது கணிப்பிடப்பட்டது.

மேலும் சந்தைப் பெறுமதிகளைப் பயன்படுத்தி, நிறையேற்றிய சராசரி மூலதனக் கிரயம் சரியாக கணிப்பீடு செய்யப்பட்டது.

நீண்டகால நிதியிடலை தெரிவு செய்கையில் இவ் விடயம் சரியாக இனங்காணப்பட்டது.

**மோசமான செயலாற்றுகைக்கான காரணங்கள்:**

1. சாதாரண பங்குகளின் கிரயத்தை கணிப்பிடுகையில் வளர்ச்சி வீதமானது கருதப்படவில்லை.
2. தனிச்சங்களின் கிரயத்தை கணிப்பிடுகையில் வரியானது கருதப்படவில்லை.
3. ஆரம்ப வருடத்தில் மற்றும் வருட இறுதியில் மீட்கத்தகு தனிச்சங்களின் கிரயத்ததை கணிப்பிடுகையில் காசு உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல் சரியாக இனங்காணப்படவில்லை.

**பரீட்சகரின் பரிந்துரைகள்**

1. கடந்த கால வினாத்தாள்களில் பயிற்சி பெறவும்.

## பகுதி C

### வினா இல. 08

இந்த வினாவில் கேட்கப்படுவது பின்வருவனவற்றை கணிப்பீடு செய்வதன் மூலம் முரண் விகிதாசாரம் பற்றிய அறிவை பரீட்சித்தல்.

(a)

1. நேர் பொருள் விலை முரண்
2. நேர் பொருள் கலவை மற்றும் விளைவு முரண்

(b) பாதிடப்பட்ட பங்களிப்பை உண்மையான பங்களிப்புடன் இணக்கம் செய்வதற்கான தொழிற்பாட்டுக் கூற்றினைத் தயாரிக்குக.

**செயலாற்றுகை:**

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இதற்கு முழுப் புள்ளியை பெற்றுக்கொண்டதுடன் மொத்த செயலாற்றுகை சிறப்பான மட்டத்தில் காணப்பட்டது. ஆயினும் ஒரே வகையான வினாக்களில் பயிற்சி பெறாதவர்கள் கலவை மற்றும் விளைவு முரண்களை கஸ்டப்பட்டு கனிப்பிட்டுக் கொண்டனர்.

சில பரீட்சார்த்திகள் நேர் பொருள் விலை முரணை சரியான கணிப்பீடு செய்து கொண்டவர்கள் திருப்திகரமான அளவில் புள்ளிகளை பெற்றுக் கொண்டனர். ஆயினும் அவர்கள் கலவை மற்றும் விளைவு முரண்களை கணிப்பிடுகையில் கஸ்டத்தை எதிர்கொண்டதுடன் புள்ளிகளையும் இழந்தனர்.

ஆயனும் உண்மையான மற்றும் பாதீட்டு பங்களிப்புக்களின் இணக்க கூற்றானது செயற்பாட்டுக் கூற்றிலே சரியாக காட்டப்பட்டது.

**மோசமான செயலாற்றுகைக்கான காரணங்கள்:**

1. கலவை மற்றும் விளைவு முரண் தொடர்பிலான கணிப்பீட்டில் குறைந்த பயிற்சி
2. நேர் பொருள் விலை முரணை கணிப்பீடு செய்யும் போது கணிப்பீட்டிற்கு நியம விலை சரியாக எடுக்கப்பட்டதுடன் மற்றும் நியம கலவை தவறுதலாக கணிப்பீடு செய்யப்பட்டது.
3. சிலர் முரண்கள் பரதகமானது (A) மற்றும் சாதகமானது (F) என குறிப்பிடவில்லை.
4. சில பரீட்சார்த்திகள் கலவை மற்றும் விளைவு முரணை சரியான கணிப்பீடு செய்த போதும் மற்றும் நேர் பொருள் கலவை மற்றும் விளைவு முரண் என்பது சரியாக கணிப்பீடு செய்யப்பட்டது. ஆயினும் ஒவ்வொரு பொருளிற்குமான மாற்றுத்திறனை காட்டமுடியவில்லை ஆகையினால் முழுப் புள்ளியை பெற முடியவில்லை.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- கடந்த கால வினாத்தாள்களில் பயிற்சி பெறவும்.

## வினா இல. 09

புதிய செயற்றிட்டத்தின் நிகர இற்றைப் பெறுமதி மற்றும் NPV இன் அடிப்படையில் மேற்படி செயற்றிட்டத்தின் சாத்தியத்தன்மையை கணிப்பிடுமாறு கேட்கப்பட்டது.

**செயலாற்றுகை:**

பெரும்பாலானவர்களால் இந்த கேள்விக்கு விடை அளிக்காத போதும் செயற்பாடானது திருப்திகரமான மட்டத்தில் இல்லை.

**மோசமான செயலாற்றுகைக்கான காரணங்கள்:**

1. புதிய உபகரண பெறுமதியான ரூ 60 மில்லியனானது 3வது வருடத்தில் கருதப்படவில்லை. சில பரீட்சார்த்திகள் உபகரணத்தின் 4 வது வருடத்திற்குமான கிரயத்தை கணிப்பீடு செய்தனர்.
2. காசுப் பாய்ச்சல் கணிப்பீடு தொடர்பில் பெறுமானத் தேய்வு கட்டணங்களை கருதிக் கொள்ளல்
3. உபகரணமானது 3வது வருடத்தில் புதிய உபகரணத்துடன் மாற்றீடு செய்யப்படும் என கூறிய போதும் புதிய உபகரணம் தொடர்பில் 3வது வருடத்துக்கும் மூலதனப் படியை கணிப்பீடு செய்தல்.
4. அமைக்கப்பட்ட கிரயம் ரூபா 2 மில்லியன் ஆனது செயற்றிட்டத்தின் ஆரம்பத்தில் கருதப்படவில்லை.
5. பெறுமானத்தேய்வு சீராக்க தவறான வரி பொறுப்பு கணிப்பீட்டை கருதினர்.
6. 5 வது வருடத்துக்கான வரி கணிப்பீட்டை எந்தவொரு பரீட்சார்த்திகளும் உபகரணத்தின் அதன் பதிவழிப்பு பெறுமதியுடன் இற்றைப் பெறுமதியுடன் ஒப்பீடு செய்து காட்டவில்லை.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

1. செயற்றிட்டத்தின் சாத்தியத்தன்மை தொடர்பில் வரி கணிப்பீட்டை கவனமாக மேற்கொள்ளல்.
2. நீங்கள் செய்தது தொடர்பில் நம்பிக்கை அற்ற போதும் கணக்கை தொடர்ச்சியாக செய்தல்.

**வினா இல. 10**

பகுதி A யானது சமமான அலகுகள் மற்றும் கிரயக் கூற்றையும் செயன்முறைக் கணக்கையும் தயாரிக்குமாறு மற்றும் பகுதி B யானது ஒன்றித்த இலாபக் கனவளவு மற்றும் இலாப நட்ட மற்ற (சமநிலை) விற்பனைப் பெறுமதியை கணிப்பிடுமாறு கேட்கப்பட்டது.

**செயலாற்றுகை:**

பகுதி A யில் பரீட்சார்த்திகள் தெரிந்த தரவுகளை பயன்படுத்தி செயன்முறைக் கணக்கினை தயாரித்து புள்ளிகளை பெற்றுக் கொண்டனர். ஆயினும் இலாப நட்ட மற்ற அலகு கூற்று மற்றும் கிரயம் மற்றும் இறுதி புத்துருவாகும் வேலைக்கான சமப்பாட்டு புள்ளியை கணித்தலில் தேவையான அளவு அறிவை கொண்டிருக்கவில்லை.

மேலும் அவர்கள் கூற்றை தயாரிக்கையில் சமப்பாட்டு புள்ளியின் அசாதாரண நட்டத்தை கருத்தில் கொள்ளவில்லை. சாதாரண நட்டத்தின் இழிவுப் பெறுமதியானது இலாப நட்ட மற்ற அலகுகள் மற்றும் கிரயத்தை கணிப்பிடுகையில் கருத்தில் கொள்ளப்படவில்லை.

உரிய அலகுகளிற்குரிய மொத்த கிரய சமப்பாட்டு புள்ளியை இனங்காணலில் ஆரம்ப புத்துருவாகும் வேலை கருதப்படவில்லை.

பகுதி B யானது திருப்பதிகரமானதாக காணப்படவில்லை ஏனெனில் அவ் விடயங்கள் தொடர்பில் எவ்வித அறிவும் இல்லை. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இரண்டு விற்பனை விலைகளை ( 1,400/- + 600/-) இணைந்த விற்பனையாகவும் மற்றும் இரண்டு பங்களிப்புக்கள் ரூ 570 மற்றும் ரூ 170 மற்றும் விற்பனைக்கான பங்களிப்பு வீதமான 37% மானது தவறானதாகும்.

**மோசமான செயலாற்றுகைக்கான காரணங்கள்:**

1. கேள்வியை முறையை வாசிக்காமல் PQ உற்பத்தி மற்றும் விற்பனை அலகுகள் 36,000 ஆக கருதப்பட்டது.
2. மாறும் மேந்தலைகள் ரூ 120/- மற்றும் மாறும் கிரயம் ரூ 25/- ஆகியன கருத்தில் எடுக்கப்படவில்லை.

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- கடந்த கால வினாத்தாள்களில் பயிற்சி பெறவும்.
- சுய கற்றல் புத்தகத்தை கற்கவும்